அசல் வழக்கு எண்: 61/2022
DEPOSITION OF WITNESS: P.W.3

| | |
|---|---|
| பெயர் | சிவகாமி |
| கணவர் பெயர் | பழனி |
| வயது | 56 |
| கிராமம் | இராந்தம் |
| வட்டம் | போளூர் |
| தொழில் | விவசாயம் |

The Witness sweared under Oaths Act 1969 on this the day of 13th day of March 2026

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கில் வாதி தரப்பு 3ம் சாட்சி ஆவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்திற்கு நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். ஆவணங்கள் ஏதும் இல்லை.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –</u>**

எனக்கு வாதி எலத்திரியானை தெரியும். எலத்திரியான் அப்பா பெயர் எத்திராஜ் ஆகும். அவரின் முதல் மனைவி பெயர் எல்லம்மாள் ஆகும். 2வது மனைவி பெயர் சின்னகுழந்தை ஆகும். எல்லம்மாள் உயிருடன் இருந்த போதே எத்திராஜ் சின்னகுழந்தையை திருமணம் செய்து கொண்டார். இந்த வழக்கு பிரதிவாதி சுள்ளி எல்லம்மாளின் மகள் ஆவார். அவரது தம்பி சின்ன வயதிலேயே இறந்துவிட்டார். இந்த வழக்கை வாதி பிரதிவாதிகள் மீது 2020ம் வருடம் தாக்கல் செய்தார். 1ம் பிரதிவாதி எல்லம்மாள் எப்போது இறந்தார் என்று தெரியாது. ஆனால் வழக்கு போட்ட பின்னர் தான் அவர் முன்னரே இறந்த விவரம் எங்களுக்கு தெரிய வந்தது. எலத்திரியான் எனது மருமகன் ஆவார். வாதி எலத்திரியான் தாவா சொத்துக்கள் அவரது அப்பா தனக்கு தான செட்டில்மெண்ட் மூலம் கொடுத்த சொத்துக்கள் என இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். எத்திராஜ் வாதி எல்த்திரியானுக்கு 12 வயது இருக்கும் போது தான செட்டில்மெண்ட் எழுதி வைத்தார். தேதி, வருடம் ஞாபகம் இல்லை. எந்த சர்வே எண் சொத்துக்கள், எவ்வளவு விஸ்தீரணம் தான செட்டில்மெண்ட் கொடுத்தார் என எனக்கு ஞாபகம் இல்லை. எத்திராஜ் மேற்கண்ட தான செட்டில்மெண்ட் எழுதிய போது அவர் எலத்திரியான் மற்றும் 2ம் மனைவியுடன் கூட்டு குடும்பமாக இருந்தார் என்றால் சரிதான். வாதி பெயரில் உள்ள தானசெட்டில்மெண்டில் நான் கையொப்பம்

எதுவும் செய்யவில்லை. வா.சா.ஆ.7 ல் சாட்சி கையெழுத்து போட்ட சின்னகுழந்தை கவுண்டர் மகன் பாண்டு உயிருடன் உள்ளார். பெரியகரம் மதுரா பூங்கொல்லைமேடு கிராமத்தை சேர்ந்த பட்டு கவுண்டர் மகன் கணேசன் யார் என்று எனக்கு தெரியாது. அவர்களை தவிர்த்து வேறு யாரும் சாட்சி கையெழுத்து போடவில்லை. மேற்கண்ட வா.சா.ஆ.7 தான செட்டில்மெண்ட் எழுதிய பின்னர் சுமார் 10 வருடங்கள் எத்திராஜ் உயிருடன் இருந்தார். இறக்கும் வரையில் அவர் தான் குடும்ப கத்தாவாக இருந்து குடும்பத்தை பராமரித்து வந்தார் என்றால் சரிதான். எத்திராஜ் உயிருடன் இருந்த போது தாவா சொத்துக்களில் அவர் தான் பயிர் செய்து அரசாங்கத்திற்கு வரி செலுத்தி வந்தார் என்றால் சரிதான். எத்திராஜ் 07.03.2016 ம் தேதி இறந்துவிட்டார் என்றால் சரிதான். எத்திராஜ் உயிருடன் இருந்த போது தாவா சொத்துக்களை பொருத்து தனது முதல் மனைவி எல்லம்மாளுக்கு கிரைய பத்திரம் எழுதி வைத்தார் என்றால் எனக்கு அது தெரியாது. தற்போது வழக்கிற்கு பின்னர் தான் தெரிய வந்தது. தாவா சொத்தில் எந்தெந்த சர்வே எண் எவ்வளவு விஸ்தீரணம் எல்லம்மாளுக்கு எத்திராஜ் எழுதி வைத்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். தற்போதும் மேற்கண்ட விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாதி எலத்திரியான் எல்லம்மாள் பெயரில் எத்திராஜ் எழுதி வைத்த சொத்துக்களுக்கும் வழக்கில் உரிமை கோருகிறாரா என்றால் ஆமாம். தாவா சொத்திற்கான பட்டா எலத்திரியான் பெயரில் தான் உள்ளது. அந்த பட்டா எண் எனக்கு ஞாபகம் இல்லை. எந்தெந்த சர்வே எண்ணிற்கு பட்டா உள்ளது என்று எனக்கு தெரியாது. வாதி தாவா சொத்திற்கான அடங்கல் கணக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். எந்த சர்வே எண்களில் என்ன பயிர் செய்ததாக அடங்கல் கணக்கில் உள்ளது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வரி ரசீது எலத்திரியான் பெயரில் தான் செலுத்தப்பட்டுள்ளது. எந்த வருடத்திற்கான வரி ரசீது என்றும் எந்த சொத்துக்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.15 ன் மூலம் எத்திராஜ் உயிருடன் இருந்த போது எல்லம்மாளுக்கு தாவா சொத்துக்களில் 4 அயிட்ட சொத்துக்களை எழுதி வைத்துள்ளார் என்றால் அந்த விவரம் வழக்கு தாக்கல் செய்த பின்னர் தான் தெரியவந்தது. எந்த சொத்துக்கள் எழுதி வைத்தார் என எனக்கு தெரியாது. தான் கிரையம் பெற்ற சொத்துக்களை 1ம் பிரதிவாதி எல்லம்மாள் 2ம் பிரதிவாதி சுள்ளிக்கு வா.சா.ஆ16 மூலம் தான செட்டில்மெண்ட் கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. எனக்கு படிக்க தெரியாது. அதன் பின்னர்

மேற்கண்ட சொத்துக்களானது வருவாய் துறை ஆவணங்களில் 2ம் பிரதிவாதி சுள்ளி பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. அந்த பட்டா எண் 3960 என்றால் எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதி சுள்ளி தான செட்டில்மெண்ட் பெற்ற பின்னர் தனது பெயரில் உள்ள சொத்துக்களில் பயிர் செய்து வந்தார் என்றால் வாதி தான் பயிர் செய்தார். பிரதிவாதி பயிர் வைத்தது எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதி வைத்த நாற்றங்காலை வாதி எலத்திரியான் அழித்தது சம்மந்தமாக மங்களம் காவல் நிலையத்தில் அவரை கூப்பிட்டு விசாரித்தார்கள் என்றால் இல்லை. அவ்வாறு விசாரித்த போது எலத்திரியான் நீதிமன்றம் சென்று பரிகாரம் தேடி கொள்வதாக எழுதிக்கொடுத்தார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. எல்லம்மாள் உயிருடன் இருந்த போது அவரும் 2ம் பிரதிவாதியும் எலத்திரியான் மீது போளூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை வழக்கறிஞர் படித்து காண்பித்த பின்னர் தான் கையெழுத்து போட்டேன். எனது நிரூபண வாக்குமூலத்தில் 3ம் பத்திரியில் மேற்கண்ட உரிமையியல் நீதிமன்ற வழக்கு குறித்து தெரிவித்துள்ளேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை நான் சொல்லி தான் எழுதினார்கள். எனது நிரூபண வாக்குமூலத்தில் எத்திராஜ் கவுண்டர் தனது பூர்வீக சொத்தை தனது சகோதரர்களுடன் பாகம் பிரித்து கொண்ட விவரங்களை சொல்லியுள்ளேன். எத்திராஜ் கவுண்டர் பாகம் பிரித்த பின்னர் சொந்தமாக ஒரு ஏக்கர் நிலம் கிரையம் வாங்கினார். யாரிடம் எந்த சர்வே எண் எவ்வளவு விஸ்தீரணம் கிரையம் பெற்றார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் 2ம் பத்திரியில் குறிப்பிட்டுள்ள பல்வேறு தேதியிட்ட கிரைய பத்திரங்களை யார் யாரிடம் இருந்து எந்த தேதியில் வாங்கியது என்றால் தற்போது என்னால் சொல்ல இயலவில்லை. எனது நிரூபண வாக்குமூலத்தில் 2ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள பரிவர்த்தனை பத்திரம் யார் எந்த தேதியில் யாருடன் எந்த சர்வே எண் நிலங்களை செய்து கொண்டார்கள் என எனக்கு தற்போது தெரியவில்லை. 20.09.2004ம் எத்திராஜ் கவுண்டர் வாதி எலத்திரியானுக்கு தானம் கொடுத்த சொத்துக்களை வா.சா.ஆ.14 மூலம் ரத்து செய்துள்ளார் என்றால் அந்த விவரம் தற்போது வழக்கிற்கு பின்பு தான் எனக்கு தெரிய வந்தது. இந்த வழக்கு தாக்கல் செய்த போது எல்லம்மாள் உயிருடன் இல்லை என்றால்

சரிதான். எல்லம்மாள் உயிருடன் இல்லாத போது இந்த வழக்கில் வாதி குறிப்பிட்டுள்ள படி அவரது அனுபவத்தை தடை செய்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரிதான். அதனால் எல்லம்மாள் தடை செய்ததாக வழக்கு போட்டிருந்தால் அது தவறானது ஆகும் என்றால் சுள்ளி தான் வந்து தகராறு செய்தார். அது சம்மந்தமாக ஊரார் முன்னிலையில் பஞ்சாயத்து நடைபெற்றது. நான் அந்த பஞ்சாயத்தில் கலந்து கொள்ளவில்லை. பஞ்சாயத்தில் பேசியதற்கு வாதி, பிரதிவாதிகள் கட்டுப்படவில்லை. நான் இந்த வழக்கு வாதி எனது மருமகன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றும் அதனால் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ள தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது. மறு விசாரணை இல்லை.**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்<br><br>Sd/– S. Senthilbabu,<br>சார்பு நீதிபதி,<br>போளூர். |